[13th March 1959

**Sri K. R. VISWANATHAN :** இப்படிப் பல நோய்களிலிருந்து சர்க்கார் சிப்பந்திகள் எந்த நோயின் காரணமாக அதிகமான எண்ணிக்கையில் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** அந்த நோய்களின் விவரங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நோயை முதலில் போட்டிருப்பதால் அதில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற அர்த்தம் இல்லை. ஏதோ வரிசைக் கிரமமாக போட்டிருக்கிறார்கள், அவ்வளவுதான்

*Government employees declared medically unfit for service.*

* 762 *Q.*—**Sri K. R. VISWANATHAN :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of appeals to the Medical Board preferred by Government employees, declared unfit by the various District Medical Officers in 1957–58 and 1958–59;

(*b*) the number of cases in which reinstatement was ordered; and

(*c*) the diseases from which the persons reinstated were suffering?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** (*a*) *to* (*c*) A statement [a] is placed on the table of the House.

**Sri K. R. VISWANATHAN :** இந்தப் பல நோய்களில் நீரிழிவு நோய் (டயபிடிஸ்) இருப்பதால் வேலை செய்வதற்கு அவ்வளவு பாதகம் இருக்காது என்ற காரணத்தினால் அந்த தடையால் பாதிக்கப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவதைச் சர்க்கார் தடை செய்யுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** அது சாதாரண அளவில் இருந்தால் அதனால் பாதகம் ஒன்றும் ஏற்படாது. ரொம்ப அதிகமாக இருந்தால்தான் "டிஸ் க்வாலிபை" பண்ணுகிறார்கள். குறைவாக இருப்பவர்கள் அநேகம் பேர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

*House-sites for Harijans.*

* 763 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டு நிலங்களை ஆர்ஜிதம் செய்து வழங்குவதற்கான திட்டத்தை தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவருவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**The Hon. Sri P. KAKKAN :** A statement [b] is placed on the table of the House.

**Sri P. G. MANICKAM :** ஸார், வீட்டு மனைகட்டுகளுக்காக 300 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகவும், 1958–59-ல் 17 விண்ணப்பங்கள் எடுத்துக்கொண்டிருப்பதாகவும், 6 விண்ணப்பங்கள் நோடிபிகேஷன்படி பரிசீலிக்க அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஸ்பெஷல் டிபுடி தாசில்தார், மற்ற அதிகாரிகள் ஆகியவர்களை அதிகப்படுத்துவது "கன்ஸிடரேஷனில்" இருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். மேற்கொண்டு ஸ்பெஷல் தாசில்தார், மற்ற அதிகாரிகளை நியமிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

---

a Printed as Appendix IV on page 282 infra.

b Printed as Appendix V on page 283 infra.